# ஜனவிநோதினி.

இல. 6.] ஜூன்மீ 1876. [புஸ்த. VII.

## பம்பாய்பட்டணத்து பாரஸீகர்.

பம்பாய்நகரம் வர்த்தகத்தில் சிறப்புற்றதென்று முன் சொல்லியிருக்கிறோமல்லவா? அந்தப் பட்டணத்தில் அத்தொழிலை விசேஷமாய்ப் பாரஸீகர்களே பாராட்டிவருகிறார்கள். அவர்களில் சிலர் அந்த வியாபாரத்தினால் விசேஷமாய்ப் பயன் அடைந்து வர்த்தகவிஷயத்தில் அதிகமாய்ச் சித்திபெற்றிருக்கும் ஐரோப்பியர்களைவிட மிக்க செல்வமுள்ளவர்களாய் வர்த்தகசிரோமணியென்று பேர்பெற்றிருக்கிறார்கள். அவர்களுள் ஏழையாயிருப்பவர்கள் அநேகர் ராஜாங்கத்தில் உத்தியோகம்பெற்று, வேலைசெய்வதில் தங்களுக்கு இருக்கிற ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் புத்தியினாலும் ராஜாங்கத்தொழில்களை வெகு சீர்மையாய் நடத்திவருகிறார்கள். பாரஸீகர்கள் சூரத்தனமும் பராக்கிரமமும் உடையவர்களன்று. எப்போதும் சாந்தகுணமுள்ளவர்கள். அவர்களுள் ஒருவராவது பட்டாளத்தில் போர்ச்சேவகராய்ப் புகுந்தாரென்பதில்லை. மிகவும் அபாயத்தை விளைக்கத்தக்கதான யுத்தங்கள் நேரிட்டகாலங்களில்கூட பாரசீகர்கள் சுதேசப்பட்டாளத்தோடு சேர்ந்து தங்களால் கூடியமட்டும் ஒத்தாசைசெய்ய முயலவில்லை. அவர்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்கும் அயலார் ஒத்தாசையைத் தேடுகிற சுபாவமுள்ளவர்கள். இந்த ஜாதியார் முன் மஹம்மதியர்கள் படையெடுத்தபோது பாரஸீகதேசத்தை விட்டு ஓடிவந்து பம்பாயில் குடியேறினதாய்க் காண்கிறது. அவர்கள் ஒன்றுக்கொன்று விரோதமான குணமுள்ள இரண்டு பொருள்கள் உண்டென்று நம்புகிறார்கள். அவைகளுள் ஒன்று மிகவும் சிறந்ததும் காருண்ணியமுள்ளதுமான வஸ்து. மற்றொன்றோ அதற்கு மாறாக ஈனசுபாவமும் கொடிய குணமுமுடையது. அவர்கள் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலிய சிருஷ்டிவர்க்கங்களைத் தெய்வமாய்க் கொண்டாடுகிறார்கள். அக்கினிதேவனுடைய பாரிசுத்தியத்தைப் புகழ்கிறார்கள்.

பாரஸீகர்களில் யாராவதொருவன் இறந்துபோவானாுல், அப்போது அவன்பக்கத்தில் ஒரு நாயை வைத்துக்கொண்டிருப்பார்கள். அந்தப் பிராணாபாயகாலத்தில் அவனுடைய பிராணனைக்கொண்டுபோகக் காத்திருக்கிற கெட்டதேவதைகளை நாய்கள் ஓட்டிவிடுவதாய் அவர்கள் கொள்கை. இப்படி அவர்கள் நாய்களை மேலாய்க் கொண்டாடுவதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அவர்களுடைய முன்னோர்கள் சுதேசத்தைவிட்டுக் குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வருகையில் ஒருராத்திரி காடாந்தகாரத்தில் அவர்கள் ஏறிவந்த கப்பல் கூர்ச்சரதேசத்துக் கரைதட்டி அபாயம் நேருகிற தருணமாயிருப்பதுகண்டு அந்தக் கப்பலில் இருந்த நாய்கள் அவர்களுக்கு எச்சரிக்கை செய்தனவாம். அதேகாரணமாக அந்த ஜாதியார் பரம்பரையாய் நாய்களைக் கொண்டாடிவருகிறார்கள்.

பாரஸீகர்களில் யாராவது ஒருவன் மரித்தவுடனே அந்த உடலைச் சுத்தமான பழயதுணியால் சுற்றி இருப்புப்பாளையில் விட்டுச் சமாதிஸ்தானத்தில் கொண்டுபோய் அப்படியே வைத்துவிடுவார்கள். புதைப்பதுமில்லை, கொளுத்துவதுமில்லை. மூன்றுநாள்வரையில் அன்னாகாரங்களைக் கொண்டுபோய்க் காட்டுவார்கள்; அம்மூன்றுநாளும் அந்த உயிர் மறுபடியும் அந்தத் தேகத்திலேயே வந்து சேரும்படி முயற்சிசெய்கிறதாம்.

அவர்கள் பிரேதங்களைக்கொண்டு வைக்கக் கட்டிய சமாதிகள் வெகு விநோதமாய் இருக்கும். இப்போது அதன் விநோதங்களைப் பம்பாய்பட்டணத்தில் போய்ப்பார்த்தால் நன்றாய்த் தெரியும். அந்தச் சமாதிகளுக்கு ஓசையற்ற கோயில் என்று பெயர். அவைகள் மேலே மூடாமல் குண்டாய் வளைத்துக் கட்டியிருக்கும். அங்கே எப்போதும் கழுகுகளும் கூவிகளும் பாந்துகளும் வட்டமிட்டுக்கொண்டே இருக்கும். அவை இரண்டுமூன்று அறையாய்க் கட்டியிருக்கும். அவைகளுள் மேற்றட்டு புருஷர்களுக்கும், இரண்டாவது பெண்களுக்கும், மூன்றாவது குழந்தைகளுக்குமாகக் கட்டியவை. அதில் கிணறுபோல உள்ளே இறங்க வட்டமாய்ப் படி கட்டியிருக்கின்றது. யாராவது ஒருவன் இறந்தவுடனே அதில் கொண்டுவிட்டால், அங்கே காத்திருக்கிற கழுகுகள் ஓடிவந்து அவ்வுடலைப் பிடுங்கத் தலைப்படும். முதல்முதல் கண்ணைப்பிடுங்கினால், அந்த ஆத்மா நல்லகதியடையுமாம். மாமிசங்களையெல்லாம் பக்ஷிகள் பிடுங்கிப் புசித்தவுடன் எலும்புகளையெல்லாம் அடித்தளத்தில் தள்ளிவிடுகிறார்கள். அங்கே எலும்புகள் அதிகமாய்ச் சேர்ந்துபோனால், அவைகளை வாரிக்கொண்டுபோகக் கீழால் ஒருவழி ஏற்படுத்தியிருக்கிறது. பாரஸீகர்கள் செத்தவுடலை ஹிந்துக்களைப்போல் தகனஞ்செய்வதுமில்லை; மற்றவர்களைப்போல் புதைப்பதுமில்லை. அதற்கு அவர்கள் ஒரு காரணஞ்சொல்லுகிறார்கள். அதிபரிசுத்தமான நெருப்பில் அசுத்தமான உடம்பைப் போடக்கூடா

தையை உள்ளத்தினின்றே வந்ததென்று நினைத்து அபிமானமாகிய பைத்தியம் மேற்கொண்டு தன் பெருத்த ராஜ்யத்தின் மூன்றில் ஒருபங்கை அவளுக்குக் கொடுத்தார்.

பின்பு இரண்டாவது மகளைப்பார்த்து, அம்மா மந்தரை, உன் கருத்தென்னவென்று கேட்க, அவளும் மூத்தவளைப்போல் மோசக்காரியாகையால் பேச்சில் அவளுக்குப் பின்னிடாமல் ஒரு பங்கு அதிகமாகவே, ஐயா, தேவரீரிடத்தில் எனக்கிருக்கும் அன்பைப்பார்த்தால் எங்கள் அக்காளுக்குள்ள பிரீதி ஏகதேசமாய் விடும். அன்றியும் மகாராஜனாயிருக்கும் என் தந்தையினிடத்தில் எனக்கு அதிகப் பிரீதியிருப்பதனால் மற்றெவ்வித சந்தோஷத்திலும் என் மனஞ்செல்லுகிறதில்லையே என்றாள்.

இந்த இனியவார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் இப்பேர்க்கொத்த பிரியமான குழந்தைகள் இருக்கையில் நம்மைவிடப் புண்ணியவான் எவனிருக்கிறானென்று நினைத்து, மூத்தவளாகிய கேகவிக்குக் கொடுத்ததுபோலவே மந்தரைக்கும் அவள் புருஷனுக்கும் மூன்றிலொருபங்கு கொடுத்தார்.

பின்பு தான் மிகுந்த பிரீதிவைத்திருந்த கடைசிமகளாகிய காந்தர்வதத்தையைப்பார்த்து, இவளைத் தன் சகோதரிகளைக் காட்டிலும் வெகு செல்வமாய் வளர்த்ததனால் அவர்களைவிட இவளுக்கு நம்மிடத்தில் அதிக விசுவாசமிருக்கும்; ஆகையால் இவள் வெகு அன்போடுபேசி நம்மைச் சந்தோஷப்படுத்துவாள் என்று நினைத்து, அம்மா, நீ என்னசொல்லுகிறாய் என்றார்? அதற்கு அவள்: தன் சகோதரிகள் உதட்டில் ஒன்றும், உள்ளத்திலொன்றுமாகப் பேசுகிறவர்களென்றும் மகாராஜன் பிழைத்திருக்கும்பொழுதே தாமுந் தங்கணவரும் ஒன்றுசேர்ந்து அவர் தேசத்தைப் பிடுங்கிக்கொண்டு ஆளுகைசெய்ய இப்படி மோசமான வார்த்தைகளால் அவரை ஏமாற்றினார்கள் என்றும் நன்றாயறிந்து, அவர்கள் இச்சகவார்த்தையை வெறுத்து, ஐயா! தாங்கள் தந்தை, நான் மகள்; தங்களிடத்தில் கிரமமாய் எனக்கு எவ்வளவு பிரீதி இருக்கவேண்டியதோ அவ்வளவு இருக்கிறதென்றாள்.

அரசன் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு, ஆ! நம்முடைய பிரியமான பெண் இப்படி நன்றியற்றவளைப்போல் பேசுகிறாளே; இதென்ன காலக்கேடென்று நினைத்து, அம்மா! நன்றாய் யோசித்துப் பேசு, நீ சொன்னதைச் சொல்லவேண்டியபிரகாரம் சரியாய்ச் சொல்; இல்லாமற்போனால் உன் க்ஷேமத்திற்குக் குறைவுண்டாகுமென்றார்.

காந்தருவதத்தை, ஐயா! நீங்கள் என்பிதா, என்னைப் பெற்றெடுத்துப் பிரியமாய் வளர்த்தீர்கள். அதற்குப் பதிலாய் என் கடமை எவ்வளவோ அவ்வளவு நீங்கள் சொன்னபேச்சை அன்போடு

கேட்டு கவுரவித்துவருகிறேன். என் சகோதரிகளைப்போல் உங்களைவிட இவ்வுலகத்தில் பிரியமானது ஒன்றுமில்லை என்று கேட்டவர்கள் மலைக்கும்படி பேச என்னுலெழவில்லையே. நல்லது, என் சகோதரிகள் தந்தையைவிட மற்றெதினிடத்திலும் பிரீதியில்லையென்றுர்களே; அப்படியானுல், இவர்களுக்குக் கணவர்களேதுக்கு? நான் கைநீட்டுங் கணவன்மீது எனக்குள்ள பக்தி சிரத்தையிற் பாதியாவது வைக்கவேண்டாமா? தகப்பனிடத்திற் பிரீதியெல்லாம் வைத்து வீணுக்கு விவாகஞ்செய்துகொண்ட என் சகோதரிகளைப்போல நானும் செய்வேனுவென்றுள்.

தன் சகோதரிகள் தகப்பனிடத்தில் தங்களுக்கு வெகு பிரீதியிருக்கிறதாக மேலுக்குச் சொன்னதுபோலவே காந்தர்வதத்தைக்குத் தன் தந்தையினிடத்தில் உண்மையாய்ப் பிரீதியிருந்தது. வேறொருசமயத்தில் மகாராஜன் கேட்டிருந்தால் நன்றியற்றவார்த்தைகளென்று தோன்றுமல் அன்புள்ள மகள் சொல்லவேண்டிய மாதிரியாகவே வெகு பிரியமாய்ப் பேசியிருப்பாள். ஆனுல் தன் சகோதரிகளுடைய மோசமான இச்சகவார்த்தைகளையும், அதற்கு மகாராஜன் முன்பின் யோசிக்காமல் தன் ராஜ்யத்தை வெகுமதியாகக் கொடுத்ததையும் பார்த்து, இப்பொழுது நமக்குப் பிரீதியிருக்கிறதென்று சொல்லிச் சும்மாயிருத்தலே வெகு உத்தமமான காரியமென்று நினைத்தாள். இதனுல் அவளுடைய பிரீதி ராஜ்யலாபத்தைப் பற்றியதல்ல என்று சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ளலாம். அன்றியும் அவள் வார்த்தையில் ஆடம்பரம் ஒன்றுமில்லாமையால் அவள் சகோதரிகள் எவ்வளவு மோசக்காரிகளோ, அவ்வளவு இவள் சத்தியவதியென்றும் அறியலாம்.

மகாராஜன் சுபாவத்திலேயே வெகு கோபமும் அவசரமும் உள்ளவர். அப்படிப்பட்டவருக்குக் கிழத்தனம் வந்து உடம்பு மெலிந்து புத்தியுந் தடுமாறிப்போனதனுல், இது உண்மை, இது இச்சகவார்த்தை, இது தேனெழுகப்பேசும் பேச்சு, இது உள்ளத்தினின்று வரும்சொல் என்று அறியாமல், காந்தர்வதத்தையின் கபடமற்ற வார்த்தையைக் கர்வமான வார்த்தையென்று வெகு கோபங்கொண்டு அவளுக்குக் கொடுக்கவைத்திருந்த ராஜ்யத்தின் மூன்றுவது பாகத்தைத் தன் இரண்டு பெண்களுக்கும் அவர்களின் கணவராகிய சுமதி, சுபாரிசன் இவர்களுக்கும் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். அன்றியும், அந்தச் சுமதி சுபாரிசன் இவர்களை அழைத்து மந்திரி பிரதானிகளின் சமுகத்தில் அரசர்களுக்குரிய மகுடஞ்சூட்டித் தன் அதிகாரம், வருமானம், ராஜ்யபாரம் முதலிய அரசனுக்குரிய அங்கங்களையெல்லாம் கொடுத்துவிட்டு, மகாராஜனென்னும் பெயரைமாத்திரம் வைத்துக்கொண்டு போர்வீரரான பிரபுக்கள் நூறுபேர் பரிவாரமாய்ப் புடைசூழ்ந்

றுவர, ஒவ்வொரு மகள் அரமனையில் ஒவ்வொருமாதமிருக்கப் போகிறதாய்ச் சொன்னார்.

இப்படிக் கொஞ்சமேனும் யோசிக்காமல் கோபவெறியினால் தன் ராஜ்யத்தை இரண்டு பெண்களுக்கும் தத்தஞ்செய்த விபரீதத்தைக்கண்டு மந்திரி பிரதானிகள் எல்லோரும் ஆச்சரியமடைந்து விசனப்பட்டார்கள். ஆனால் சுவிக்கிரமனென்னும் மந்திரியைத்தவிர மற்றெவருக்கும் கோபித்துக்கொண்டிருக்கும் அரசனோடு எதிர்த்துப்பேசத் தைரியமில்லாமல் போய்விட்டது. சுவிக்கிரமனென்னும் மந்திரியும் காந்தர்வதத்தைக்கு அனுகூலமாய்ப் பேச வாயெடுக்கையில் மகாராஜன் வெகு கோபங்கொண்டு அவனைப்பார்த்து: நீ வாயைமூடு, இனி பேசுவாயாகில் உன் தலை போய்விடுமென்றார். உத்தமனாகிய சுவிக்கிரமன் இப்பேர்க்கொத்த வீண் மிரட்டுக்கெல்லாம் பயப்படுகிறவனல்ல. மகாராஜனிடத்தில் அரசனுக்குரிய கவுரவத்தையும், தந்தைக்குரிய அன்பையும், எஜமானனுக்குரிய நம்பிக்கையுமுள்ளவனாய் எப்பொழுதும் அண்டையிலேயே இருந்தவன். அன்றியும், தன் எஜமானனாகிய மகாராஜனுடைய சத்துருக்களோடு எதிர்த்துச் சண்டைசெய்யவே தான் பிழைத்திருக்கிறதாக எண்ணி அவனைக் காப்பாற்றும்பொருட்டு தன் உயிரைக்கொடுக்க முன்பின் பாராத தீரன். ஆகையால், மகாராஜன் இப்பொழுது தனக்குத்தானே சத்துருவாய்விட்டதைக் கண்டு, அவருக்கு க்ஷேமமுண்டாகும்படி முறைதவறாமல் அவரையே எதிர்த்துப்பேசத் தொடங்கினான். மேலும், அந்தச் சுவிக்கிரமன் அரசனுக்கு அதுவரையில் நம்பிக்கையுடன் ஆலோசனை சொல்லிக்கொண்டுவந்த மந்திரியாகையால் இப்பொழுதும் அவரைப்பார்த்து: மகாராஜனே, இதுவரையில் அநேக பெருத்தவிஷயங்களில் என் அபிப்பிராயப்படி செய்திருக்கிறீர்கள். இப்பொழுது தாங்கள் செய்திருக்கும் காரியம் என் புத்திக்கு விரோதமாய்ப்படுகிறது. அதைத் தாங்களும் அப்படியே எண்ணி நான் சொல்லும் யோசனைப்பிரகாரம் செய்யக்கோருகிறேன். தங்களுடைய கடைசி மகளுக்கிருக்கும் பிரீதி அற்பமல்லவென்று உறுதியாய் நம்புங்கள். இது பொய்யாகிறபட்சத்தில் என் பிராணனைக் கொடுத்துவிடுகிறேன். மனதில் சற்றுங் கபடமில்லாமல் மெதுவாய்ப் பேசுகிறவர்களுக்கு நம்மிடத்தில் அன்பில்லையென்று நினைக்கலாமா? பலவான்கள் இச்சகவார்த்தைகளைக் கேட்டு மயங்கிப்போகிறார்கள். மானிகள் கபடமற்றவார்த்தையிலே சந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

ஆகையால், இதுகளையெல்லாம் செவ்வையாய் யோசித்து, இப்பொழுது தாங்கள்செய்த விபரீதகாரியத்தை மறுக்கவேண்டியது. தங்கள் விஷயத்தில் பிராணனைக் கொடுக்க சித்தமாயிருக்கும் என்னைப் பயப்படுத்துவதனால் பிரயோஜனமென்ன? இப்பொழுது

நான் தருமமாய்ப் பேசவேண்டியபடி பேசாமல் விடுவேனு என்ருன். இப்படி உத்தமனுகிய சுவிக்கிரமனுடைய கபடமற்ற வார்த்தையைக் கேட்கையில், மகாராஜனுக்குக் கோபம் அதிகரித்து, வைத்தியனைக் கொன்று தன்னைக் கொல்லவந்த நோயைப் பிரியமாய்க் காப்பாற்றும் வெறிபிடித்த நோயாளியைப்போல் நம்பிக்கையுள்ள மந்திரியாகிய சுவிக்கிரமனைப்பார்த்து: அடா, நீ இத்தேசத்தைவிட்டு ஓடிப்போகவேண்டியது. உனக்கின்னும் ஐந்துநாள் கெடுகொடுத்திருக்கிறேன்; இதற்குள் உன் பிரயாணத்துக்கு வேண்டியதையெல்லாஞ் சித்தப்படுத்திக்கொள். ஆருவதுநாள் இந்த வூரில் தலைகாட்டுவாயாகில் உடனே உன் உயிர் போய்விடுமென்ருர். அதற்குச் சுவிக்கிரமன் மகாராஜனைப்பார்த்து: ஐயா! இதோ போகிறேன். நீங்கள் இப்படிப் பேசத் தலைப்பட்டபின்பு இங்கிருக்கிறது இத்தேசத்தைவிட்டுப் போனதுபோலல்லவா? நான் எப்படிப் போனுலும் போகிறேன். வெகு சரியான எண்ணத்தோடும் விவேகத்தோடும் பேசிய பெண்ணுகிய காந்தர்வதத்தையைத் தெய்வமே காப்பாற்றவேண்டியது. அவளுடைய சகோதரிகள் சொல்லிய விஸ்தாரவார்த்தைகளுக்குத் தகுந்தபடி மகாராஜனிடத்தில் பிரீதியுள்ளவர்களாயிருந்தால் அதுவே போதும். எனக்கென்ன, இதுவரைக்கும் இந்தத் தேசத்தில் எப்படி ஜீவனஞ்செய்துவந்தேனே, அப்படியே வேருெரு தேசத்திலும் ஜீவனம் செய்யப்போகிறேன் என்றுசொல்லி அவ்விடத்தை விட்டுப்போனுன்.

பிறகு காசிராஜனையும் அங்கதேசாதிபதியையும் அழைத்துவந்து, அவர்களைப்பார்த்து: கேளுங்கள், மகாராஜனுக்குக் கடைசிமகளிடத்தில் இருந்த பிரீதி போய்விட்டது. அவளை விவாகம்பண்ணிக்கொள்ளும் பட்சத்தில் அவள் தேகந்தவிர வேருெராஸ்தியும் இல்லை. ஆகையால் இதுவரையில் அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றிருந்த நினைப்பை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களோவென்று சொன்னதின்பேரில், அங்கதேசாதிபதி: அப்படியானுல் நான் அவளை விவாகம்பண்ணிக்கொள்ளுகிறதில்லையென்ருன். காசிராஜனே: நல்லது, இந்தக் காந்தர்வதத்தை மெதுவாய்ப் பேசப்பட்டவள். அன்றியும் தன் சகோதரிகளைப்போல் இச்சகம்பேசத் தெரியாதவள். இந்தத் தப்பினுல் அல்லவோ தன் தகப்பனிட பிரீதியை இழந்தாளென்று நன்ருய்த் தனக்குள் நிச்சயித்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு: பெண்ணே காந்தர்வதத்தை! உன் குணுதிசயங்களே ஒரு ராஜ்யத்தைக்காட்டிலும் மேலான சீதனமாய் இருக்கின்றன. உன் தந்தைக்கு உன்னிடத்தில் பிரீதியில்லாமல்போனுலும் அவரிடத்திலும் உன் சகோதரிகளிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு என்னுேடுவந்து அழகிய காசிதேசத்திற்கு மகாராணியாய் உன் சகோதரிகளுக்குள்ள ராஜ்யங்களைக்காட்டிலும் மேலான ராஜ்யங்களை ஆளலாமென்று சொல்லி, அங்கதேசாதி

பதியைப்பார்த்து: ஓய், உம்முடைய வார்த்தை நீர்மேல் எழுத்தைப் போல் நிலையற்றது. இத்தனைநாள் இப்பெண்ணினிடத்து உமக்கிருந்த பிரீதியெல்லாம் தண்ணீராய் ஒருநிமிஷத்தில் கரைந்துபோய் விட்டதல்லவா என்று பரிகாசமாய்ச் சொன்னான்.

அப்பொழுது காந்தர்வதத்தை கண்ணீர்விட்டு அழுது, தன் சகோதரிகளைப் பார்த்து: அம்மைமாரே நான் போய்வருகிறேன். நீங்கள் சொன்னசொல் தவறாமல் நம்முடைய தகப்பனாரிடத்தில் பிரீதியுடன் இருக்கக் கோருகிறேன் என்று சொன்னாள். அதற்கு அவர்கள் முகங்கடுத்து: நீ எங்களுக்குப் புத்திசொல்லவேண்டாம். நாங்கள் என்னசெய்யவேண்டுமோ அது எங்களுக்குத் தெரியும். ஆனால், உன்னைச் சீதேவிகொடுத்த பிச்சையாக எண்ணி விவாகஞ் செய்துகொண்ட கணவனுக்குமாத்திரம் சந்தோஷம் உண்டாகும் படி நடந்துகொண்டால் அதுவே போதுமென்று பரிகாசமாய்ச் சொன்னார்கள். காந்தர்வதத்தை தன் சகோதரிகளுடைய கபடத்தை நன்றாய் அறிந்தவளாகையால், அவள் வசத்தில் தன் தந்தையைவிட்டுப் போவதில் சற்றும் சம்மதியில்லாமல், ஐயோ! இந்த மோசக்காரிகளிடத்தில் மகாராஜனை ஒப்புவிக்கும்படி நேரிட்டதே யென்று விசனப்பட்டுக்கொண்டே போனாள்.

## பளிங்கைப்பற்றிய சில குறிப்புகள்.

இப்பத்திரிகையை வாசிக்கும் சிறுபிள்ளைகள் கண்ணாடி ஜன்னல்வழியாகப் பார்க்கும்போதாகிலும், புட்டி லாந்தல் குளோப்பு முதலாகிய பளிங்குசாமான்களைக் காணும்போதாகிலும், முகக் கண்ணாடி முன்னிருந்து தலைவாரிக்கொள்ளும்போதாகிலும், பளிங்கு என்பது என்னபதார்த்தம்? அதை முதலில் செய்தவர் யார்? அது எவ்வளவுகாலமாக உபயோகப்பட்டுவருகின்றது என்று விசாரிக்கத்தொடங்குவார்கள். வேலைசெய்து வீட்டுக்குத் திரும்பிவரும் தகப்பனையும், தலைநோயால் வருந்தும் தாயையும் இக்கேள்விகளுக்கு உத்தரம்சொல்லும்படி கேட்டால் அவர்களுக்கு வருத்தமாயிருக்கும். ஆயினும் தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ள விரும்புவது மிகவும் நல்லகாரியம். உன்னைப்பார்க்கிலும் வயதிலும் விவேகத்திலும் பெரியவர்களாயிருக்கிறவர்களைக் கேட்டாகிலும், உன்னிடத்திலிருக்கிற புத்தகங்களைப் படித்தாகிலும் நீ தெரிந்துகொள்ளவேண்டும்.

அநேக நூறு வருஷங்களுக்குமுன் பினிஷியர் என்னும் ஜாதியார்கள் பளிங்கை முதலில் செய்ததாகக் காணப்படுகின்றது. பூர்வீக சரித்திரத்தில் சொல்லியிருக்கிற பேர்பெற்ற டைர், சைடன் என்னும் பட்டணங்களில் பளிங்கு முதலில் உண்டானதாகக் கேள்விப்படுகிறோம்.

பளிங்கு முதலில் உண்டானவிதம் இன்னதென்று பிளினி என்னும் பழைய சரித்திரக்காரர் கீழே வருமாறு சொல்லுகிறார்.

பினிஷியாதேசத்தில் ஒரு கப்பல் கரைதட்டி உடைந்துபோன பின்பு கப்பலோட்டிகள் தங்கள் வஸ்திரங்கள் உலரவும், சமையல் செய்யவும் கப்பலிலிருந்து ஒதுங்கிவந்த உவர்மண்ணினால் கடற்கரையிலிருந்த மணலின்மீது ஒரு அடுப்புபோட்டார்கள். சமையல்செய்து சாப்பிட்டபின்பு வெண்மையும் பிரகாசமும் உடையதாயிருப்பதுமன்றி ஊடுருவிப் பார்க்கக்கூடியதுமாகிய பதார்த்தத்தின் துண்டுகள் தரையின்மேலிருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இந்தத் துண்டுகள் வயிரக்கல்லைப்போல் பிரகாசித்தன. இதுதான் பளிங்கு; மணலும் உவர்மண்ணும் உருகிப் பளிங்கானதைப்பார்த்து அதைப்போலவே செய்யத்தொடங்கி சிலகாலத்துக்குப்பின்பு பளிங்குசெய்யத் தெரிந்துகொண்டார்கள்.

இது உண்மையாகத் தோன்றவில்லை. ஏனெனில் பளிங்குசெய்வதற்கு அடுப்புத் தீ போதாது. தீ அதிகமாகவேண்டும்.

பளிங்கு செய்யத்தெரிந்தவுடன் யாவரும் வீடுகளுக்குக் கண்ணாடி ஜன்னல்கள் செய்துகொண்டதாக நினைக்கக்கூடாது. இங்கிலாந்துதேசத்திலிருக்கிற பழைய கோவில்களுடைய அழகான வர்ணம்வைத்த கண்ணாடி ஜன்னல்கள் ஆயிரம் வருஷத்துக்குமுன் பாகச் செய்யப்பட்டவைகள். ஆயினும் சென்ற முன்னூறு நானூறுவருஷங்களாகத்தான் பளிங்கு வீடுகளில் வழங்கிவருகின்றது. பின்னிட்டுப் பிரகாசமாகிய வெள்ளைப்பளிங்கு வழக்கத்துக்கு வந்தது. சீமையில் பழைய வீடுகளின் ஜன்னல்களைப்பார்த்தால் அந்தக் கண்ணாடியெல்லாம் சாதாரணபுட்டியைப்போல் பச்சைநிறமாய் இருண்டிருக்கும்.

பளிங்கு பலவகைப்படும். சாதாரணமான பச்சைநிறமுடைய இருண்ட புட்டிகளைச்செய்கிற பளிங்கு ஒருவிதம். ஜன்னல்களுக்கு வேண்டிய பளிங்கு ஒருவிதம். சக்கிமுக்கிப் பளிங்கு என்பது

ஒன்று. இதினால் தாகத்துக்குத் தண்ணீர்சாப்பிடுகிற டம்ளர் முதலிய பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இன்னும் உபயோகமும் விநோதமுமான அநேக சாமான்களை இதனால் செய்வதுண்டு. முகக்கண்ணாடி வேறொருவிதமான பளிங்கு. பளிங்குத் தகட்டையெடுத்து அதில் எதிர்பட்ட பொருள்கள் தெரியும்படியாக அதற்குப் பின்புறத்தில் இரசம்பூசினால் அது முகக்கண்ணாடியாகும். இவைகளைப்போல இன்னும் பலவகைப் பளிங்குகள் உண்டு. பச்சைப் பளிங்கினாலும் சக்கிமுக்கிப் பளிங்கினாலும் சாமான்கள் செய்யப்படுகிற விதம் கீழே ஒருவாறு சொல்லப்படும்.

உவர்மண், மணல்முதலாகிய சாமான்களைச் சேர்த்து உருக்கிய பளிங்கை ஒருவன் ஒரு சட்டியில் வைத்துக்கொண்டு தரையில் உட்கார்ந்திருப்பான். அவனுக்கு எதிரில் வேறொருவன் நின்றுகொண்டு நாலு அல்லது ஐந்துஅடி நீளமுள்ள ஒரு இருப்புக்குழாயைக் கையிற்பிடித்து உருகிய பளிங்கைத் துழாவிக்கொண்டிருப்பான். வேலைக்குப் போதுமான பளிங்கைக் குழாய்நுனியில் எடுத்துகொண்டு அந்தப் பளிங்குக்குள் துவாரமாகும்படி குழாயை ஊதுவான். வேண்டிய அளவு பெருத்து இலேசானபின்பு அதை எடுத்து மேடுபள்ளமின்றி உருண்டையாகும்பொருட்டு கற்பலகையின்மீது உருட்டுவார்கள். அது திருத்தமாவதற்குள் குளிர்ந்து இறுகிப்போனால் அதைத் தீயிற்காட்டி இள்கச்செய்துகொள்வார்கள். இப்படிச் செய்தான புட்டியையாவது குளோப்பையாவது வேறொரு வேலைக்காரன் எடுத்து அதற்கு விளிம்புகட்டுவான். பின்பு இந்தக் குளோப்பைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குளிரவைக்கவேண்டும். ஏனெனில் உடனே குளிர்ந்தால் உடைந்துபோகும். இதற்காக வேறொருவன் அதை இருப்புச்சலாகையில் எடுத்து அதைக் குளிரவைப்பான். இது மிகவும் வருத்தமான வேலை.

கண்ணாடித் தகடுகளை வார்க்கிறவிதம் தற்செயலாய்த் தெரியவந்தது. பளிங்குவேலைக்காரன் ஒருவன் ஒரு சட்டியில் பளிங்கை உருக்கிக்கொண்டிருந்தபோது சட்டி கீழேவிழுந்து உருகிய பளிங்கெல்லாம் தரையின்மேல் பரவியிருந்தது. அந்தப் பளிங்கை வீணாக இழக்கவிரும்பாமல் தரையின்மேல் இருந்ததைப் பேர்க்கும்போது பளிங்கு பலகை பலகையாய் வந்தது. குழாயினால் ஊதிச்செய்வதைப்பார்க்கிலும் இந்தப் பளிங்கு தகடுகள் மேடுபள்ள

மின்றி நன்றாயிருந்தன. இதை யோசித்துப்பார்க்க அவனுக்குச் சிலது தெரிந்தது. பின்பு பெரிய மேசைகளைச் செய்து அதின்மீது பளிங்கை உருக்கித் தகடுகளாக வார்த்தார்கள். இங்கிலாந்து தேசத்தில் லாங்காஷயர் என்னும் மாகாணத்தில் ராவன் எட் என்னும் பட்டணத்தில் உலகத்திலுள்ள எல்லா மேசையிலும் பெரிதான ஒரு மேசையிருக்கின்றது. அந்த மேசையிருக்கிற அறை இங்கிலாந்து தேசத்திலுள்ள அறைகளெல்லாவற்றிலும் பெரியது. வெஸ்ட்மினிஸ்டர் ஹால் என்கிற பெரிய மண்டபமும் அதற்குத் தாழ்ந்ததுதான்.

கொஞ்சகாலமாகத்தான் இங்கிலாந்தில் அதிக பளிங்கு செய்து வருகிறார்கள். அதற்கு முன் பிரான்ஸ், பொஹிமியா, வெனிஸ் என்னும் இடங்களிலிருந்து கொண்டுவரப்படும். முகக்கண்ணாடி முதலில் வெனிஸ் பட்டணத்தில் செய்யப்பட்டது. பின்பு 1673-ஆ அப்பட்டணத்திலிருந்து ஒரு வேலைக்காரனை இங்கிலாந்துக்கு அழைத்துவந்து அவ்வேலையைக் கற்றுக்கொண்டார்கள். அது முதலாகப் பொறுமையினாலும் விடாமுயற்சியினாலும் பளிங்கு வேலை வரவர விர்த்தியாகி வருகின்றது. இவ்வேலையில் இப்போது 20,000 பெரிய மனிதர்களும் சிறுவர்களும் ஜீவனஞ்செய்கிறார்கள். இங்கிலாந்திலிருந்து வெளித்தேசங்களுக்கெல்லாம் பளிங்குசாமான் கொண்டுபோகப்படுகின்றது. முன்னிருந்ததற்கு இப்போது விலையும் அதிக சகாயமாக இருக்கிறது. முன்னே நூறுரூபாய் பெறத்தக்க சாமானை இப்போது பதினைந்துரூபாய்க்கு வாங்கலாம். இது பெரிய சகாயம்.

## தசகுமாரசரிதம்.

### மூன்றாவது:

### உபஹாரவர்மாவின் கதை.

---

*தசகுமாரர்களில் ஒருவனான உபஹாரவர்மா அரசகுமாரனை வணங்கித் தன் கதையைச் சொல்லலாயினன்.*

ஓ ராஜகுமாரனே! நான் உன்னைத் தேடும்பொருட்டு தேசாதேசங்களும் தேடிக்கொண்டுபோகையில், விதேகதேசத்திற்சென்று மிதிலாநகரத்திற்குப் போவதற்குமுன்னமே இளைப்படைந்து கொ

ஞ்சநேரம் இளைப்பாறுவதற்காக ஒரு சத்திரத்தில் போய் உட்காந்தேன். அங்கே குடியிருந்த ஒரு கிழவி எனக்கு அர்க்கியபாத்தியம் முதலிய உபசாரணைகள் செய்து என்னைப்பார்த்து மாலைமாலையாய்க் கண்ணீர்பெருக்கத் தலைப்பட்டாள். நான் 'அதுகண்டு அம்மா! இப்போது நீ புலம்புவதற்கு ஏதுகாரணமென்று வினவ, அவள், குழந்தாய்! சொல்லுகிறேன் கேள். இத்தேசத்தில் பிரஹாரவர்மாவென்று ஒரு ராஜனிருந்தானல்லவா? அவனுக்கு மகததேசத்தரசனான ராஜஹம்ஸன் பிராணச்சிநேகிதனாயிருந்தான். அவ்விருவருடைய தேவிமார்களும் உயிர்த்தோழிகளாயிருந்தார்கள். இத்தேசத்தரசன் மனைவியான பிரியம்வதையென்பவள் தன் தோழியான வசுமதிதேவிமுதற் கருவுற்றிருப்பது கேள்வியுற்று அவளைப் பார்க்கவேண்டி கணவனோடுகூடப் புஷ்பபுரத்திற்குச் சென்றாள். அச்சமயத்தில் மாளவதேசத்தரசனோடு மகததேசத்தரசனுக்கு மகத்தான சண்டைநேரிட்டது. இத்தேசத்தரசன் அந்த யுத்தத்தில் அகப்பட்டுக்கொண்டு சிறிதும் தப்பித்துக்கொள்ள வழியில்லாமல் கடைசியில் மாளவராஜனுடைய தயவினால் விடுபட்டுச் சுதேசம் நோக்கிப்போகையில், தன்னுடைத் தமையன்குமாரர்கள் ஆக்கிரமித்துக்கொண்டார்களென்று வழியே கேள்வியுற்று, தன் உடன்பிறந்தாள் மகனான சுன்னதேசத்தரசனிடத்தினின்றும் துணைதேடவேண்டுமென்று காட்டுவழியாய் ஓடி வேடர்களால் பறிபட்டு எல்லாப்பொருள்களையும் இழந்தான். நான் என் கையிலிருந்த அவன் இளையகுழந்தையோடுகூட வேடர்கள் அடிக்கப்போகிறார்களேயென்று பயந்து ஒன்றியாய்க் காட்டில் ஓடினேன். அங்கே ஒரு புலி துரத்திக்கொண்டு ஓடிவருவதுகண்டு நான் கால்தடுக்கிவிழ, அக்குழந்தை கைதவறி அருகிலிருந்த ஒரு செத்தபசுவண்டைபோய் விழுந்தது. அந்தப் பசுவைப் பிடுங்கிக்கொண்டிருந்த புலியைச் சில வேடர்கள் பாணத்தால் அடித்துக்கொன்று அக்குழந்தையைக் கொண்டுபோயினர். நான் அங்கே மூர்ச்சைபோய் விழுந்துகிடப்பதுகண்டு ஒரு இடையன், தன் சேரிக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சொஸ்தப்படுத்தினான். அதன்பிறகு நான் என் எஜமானனிடம் போகப் புறப்பட்டுத் துணையில்லாமல் தவித்துநிற்கையில் என் பெண் ஒரு புருஷனோடு அவ்விடத்திற்கு வந்தாள். அவள் என்னைப்பார்த்தவுடன் கொஞ்சநேரம் கண்ணீர்விட்டழுது, கடைசியில் வேடர்கள் மடக்கியடிக்கும்போது தன் கையிலிருந்த குழந்

தையை வேடர்கள் கொண்டுபோய்விட்டார்களென்றும், யாரோ ஒரு வேடன் தன் தேகத்தைச் சொஸ்தப்படுத்தி உடனே தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள நினைத்ததுகண்டு ஈனஜாதி சம்பந்தம் கூடாதென்று தான் அதற்கு உடன்படவில்லையென்றும், அவன் அதைச் சம்மதியாமல் தன்னைச் சிரச்சேதம்செய்ய இருக்கையில், இந்த மகாபுருஷன் தற்செயலாய் வந்து அக்கொடியனைக் கொன்று தன்னை விவாகஞ்செய்துகொண்டானென்றும் தன் கதைகளைச் சொன்னாள். அந்தப் புருஷனைத் துணையாகக்கொண்டு புறப்பட்டு மிதிலாபுரிபோய்ச் சேர்ந்து பிள்ளை கெட்டுப்போன செய்தியைச் சொல்லி பிரியம்வதையின் காதுகளைக் குளுத்தினேன். அந்த ராஜனும் தன் தமையன் பிள்ளைகளோடு சண்டைசெய்து அவர்களால் சிறைசெய்யப்பட்டான். தேவியும் காவலிலேயே இருக்கிறாள். நான் பிழைக்க வழியற்று இந்தத் தள்ளாதநாளில் வலுவில் உயிரை விடவும் மாளாமல் சன்னியாசிவேஷம் பூண்டேன். என் மகள்மாத்திரம் இப்போது அரசனாயிருக்கிற விகடவர்மாவின் மகிஷியான கல்பசுந்தரியென்பவளுக்குத் தோழியாய் இருக்கிறாள். அந்த இரண்டு ராஜகுமாரர்களும் நன்றாய் வளர்ந்துவந்தார்களானால் இப்போது அவர்களுக்கு உனதவ்வளவு வயது வந்திருக்கும். அவர்கள்மாத்திரம் பிழைத்திருந்தார்களானால் இவர்களைத் துரத்த எங்நோம் பிடிக்குமென்று சொல்லிப் புலம்பினாள்.

இவ்வாறு அந்தத் தாபசி சொல்லக்கேட்டு நானும் கண்ணீர்பெருக்கி ஏகாந்தத்தில் சொன்னதாவது: தாயே! அப்படியானால் துக்கந் தீரக்கடவாய், நீ அப்போது அந்தப் பிள்ளையைப் பெறும்பொருட்டு ஒரு முனிவரை வேண்டினையல்லவா? அப்பிள்ளையை அவர் எடுத்து வளர்த்து வைத்திருக்கிறார். அக்கதையைச் சொல்லப்புகுந்தால் இப்போது முடியாது. அவைகளைச் சொல்லுவதில் பயனென்ன? நானே அவன். இந்த விகடவர்மாவைக் கொல்வது எனக்கு ஒரு பெரியகாரியமன்று. எனக்குத் தம்பிமார்களும் பலவான்களாய் இருக்கிறார்கள். அவர்களும் எனக்கு வேண்டியபடி துணைசெய்வார்கள். ஆனால் நான் இத்தன்மையானவனென்று இங்கொருவர்க்கும் தெரியாது. பெற்றோர்கட்கே தெரியாதே,மற்றவர்களுக்குக் கேட்பானேன்? ஆதலின் உன் கருத்தை உபாயமாயே முடித்துவிடுகிறேனென்றேன். அதைக்கேட்டு அக்கிழவி கண்ணும் கண்ணீருமாய் என்னைக் கட்டிக்கொண்டு அடிக்கடி உச்சிமோந்து என்னப்

பனே குழந்தாய்! நீ நெடுநாள் வாழ்ந்திருக்கக்கடவை. இப்போதே பிரஹாரவர்மா இத்தேசத்துக்கு அதிகாரியாயினான். மஹாபலபராக்கிரமசாலியான நீ கரையில்லாத சோகக்கடலினின்றும் கரையேற்றிவிட வந்திருக்கிறாயல்லவா? என்று ஆநந்தபரவசையாய்ப் பலவகையாய்ப் புகழ்ந்து, எனக்கு வேண்டியபடி உபசாரங்கள் செய்தாள். அன்றிரவு அம்மடத்திலேயே படுத்து ஒருபாயம் அன்றி நமது காரியம் எளிதில் முடிக்கத்தக்கதன்று, எக்காரியத்திற்கும் பெண்களே தகுந்த உபாயம், ஆதலில் இந்த அரசன் அந்தப்புறச் செய்தியை அறிந்துகொண்டு அதன்மூலமாய் ஏதாவது உபாயம் அநுஷ்டிக்க வேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டு இருக்கையில் கொஞ்சங்கொஞ்சமாய் இருள்நீங்கத் தலைப்பட்டது. வானத்தில் நக்ஷத்திரங்களும் ஒளிமழுங்கத் தலைப்பட்டன. அனைவர்க்கும் உற்சாகம் உண்டாகும்படி மந்தமாருதம் மெல்லமெல்ல வீசத் தலைப்பட்டது. கூடுகளினின்றும் பக்ஷிகள் பலவகையாய்க் கூவத் தலைப்பட்டன. அவைகளைக்கேட்டு ஆநந்திப்பவன்போல ஆதித்தனும் வந்து தோன்றினான்.

நான் நித்திரைவிட்டெழுந்து ஸ்நாநசந்திமுதலிய காலைக்கடன்களைக் கழித்து என் உபமாதாவண்டைபோய் அம்மா! உனக்கு இந்த விகடவர்மாவின் அந்தப்புறச்செய்தி ஏதாவது தெரியுமோவென்று வினவுகையில், அங்கே ஒரு பெண்வந்து நின்றாள். அவளைக்கண்டு என்தாய் ஆநந்தக்கண்ணீர் வழிய, பெண்ணே! நம் அரசகுமாரனைப் பார்த்தையா? நான் சிறிதும் தயவின்றி காட்டில் போட்டுவந்துவிட்டேன்; அவன்தானே வந்துசேர்ந்தான். அதிருக்கட்டும்; ராஜாவின் அந்தப்புறச் செய்தியை இவற்குச் சொல்லவேண்டுமென்றாள். அச்செய்திகேட்டு அப்பெண் பேராநந்தமடைந்து பேசுகிறாள். ஓ ராஜகுமாரனே! காமரூபதேசத்தரசனான களிந்தவர்மா என்பவனுடைய மகள் விகடவர்மாவுக்கு மனைவியாயிருக்கிறாள். அவள் அழகிலும் கல்வியிலும் தேவப்பெண்களையும் அதிசயித்தவள். விகடவர்மா அவளுக்குத்தக்க புருஷனன்று. அவனுக்கு இன்னம் பல பெண்டிர்களும் இருக்கிறார்கள் என்றதுகேட்டு, நான் இந்த புஷ்பசந்தனமுதலியவைகளை அவள் கையில் கொண்டுகொடுத்து என்னிடத்தில் பிரீதியுண்டாக்கி, தன் புருஷனிடத்தில் பல குற்றங்களைப் போதித்து அவனிடத்தில் துவேஷமுண்டாக்கக்கடவை; தமக்கு அநுகுணமான கணவனோடு கூடிய வாசவதத்தையை

முதலியவர்களுடைய கதையைச் சொல்லி அவள் மனதில் அனுதாபமும், மற்றப் பெண்டிர்களிடத்தில் விகடவர்மா அதிகமாய் ஆதரம் வைத்திருப்பதை எப்படியாவது அறிந்து அவளுடன் சொல்லி, அவன்மேல் பவுருஷமும் உண்டாக்கவேண்டும் என்றும் அந்தப் பெண்ணுக்கு உபதேசித்து, இதனால் நமக்கு பெரிது பயன்கிடைக்கப்போகிறதாதலால் நீயும் அவளைப் பிரலோபனம்பண்ணி அங்கே நாளுளும் நடக்கும் செய்திகளை எனக்கு அடிக்கடி தெரிவிக்கவேண்டுமென்று தாயையும் வற்புறுத்தினேன். அவர்களும் அப்படியே நடத்தினார்கள். சிலநாளில் என் உபமாதா என்னண்டைவந்து, என்னன்பனே! எட்டிமாத்திலேறிய முல்லைக்கொடிபோல அவள் தன்னைத்தானே தூக்கித்துக்கொள்ளும்படி செய்துவிட்டேன். இனி செய்யவேண்டுவது என்னவென்றாள். நான் என் உருவத்தை ஒரு படத்தில் எழுதி இதை நீ அவட்குக் கொண்டு காட்டு; இதைப் பார்த்தவுடன் அவள் உலகத்தில் இப்படிப்பட்ட அழகனும் ஒருவன் இருக்கிறானாவென்று வியந்து கேட்கப்போகிறாள். அதற்கு நீ இருந்தால் என்னவென்று கேள். அதைக்கேட்டு அவள் என்ன பதில் சொல்லுகிறாளோ அதை என்னுடன் சொல்லவேண்டும் என்று அனுப்பினேன். அவள் அப்படியே போய்வந்து அங்கே நடந்ததைச் சொல்லுகிறாள்.

ஓ ராஜகுமாரனே! இதை நான் அவளுக்குக்காட்டினேன்; இதைப்பார்த்து அவள் மனம் திகைத்து இப்படி இவ்வுலகத்தை அலங்கரிப்பவன் யார்? மன்மததேவனிடத்திலேகூட இவ்வளவு மேனி அழகு கிடையாதே; இந்தச் சித்திரம் எழுதியிருப்பது இன்னும் அழகாயிருக்கின்றது. இவ்வளவு அழகாய் எழுதத்தக்கவன் இவ்விடத்தில் இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. இப்படி அற்புதமாய் எழுதினவன் எவனென்று விசேஷ ஆதாவாய்க் கேட்டாள். நான் புன்னகையாய், அம்மா! மன்மததேவனுக்கும் இவ்வளவு அழகில்லை என்கிறையே, அப்படிச் சொல்லக்கூடுமோ? கடல்சூழ்ந்த இப்பூமியில் எங்கேயாவது இப்படிப்பட்ட புருஷனையும் கடவுள் படைத்திருக்கலாம். ஆயினும் ஒன்றுண்டு. ஒருவன் சவுரியம் தைரியம் பராக்கிரமம் நன்னடக்கை பூததயை சவுந்தரியம் சவுசீலயம் சாமர்த்தியம் சில்பத்திறமை உயர்ந்த கல்விமுதலிய மஹாகுணங்களையுடையவனாயிருப்பதும் அன்றி, மேற்குலத்தில் பிறந்தவனாயும் இருப்பானால் அவன் நமக்குக் கிடைப்பது அருமையென்னலாம் என்ற


தற்கு, அவள், அதேன் அப்படிச் சொல்லுகிறாய்? மனம் சரீரம் பிரா ணன் இவை ரசமற்றவைகளாயிருக்குமானால் ஒன்றும் கிடைக்க மாட்டாதுதான். இப்போது நீ சொல்வது உண்மையாய் இருக்குமானால், இந்தக் கண்கள் அந்த மஹாபுருஷனைப் பார்த்து சபலமாம்படி நீ கிருபைபண்ணவேண்டுமென்று வேண்டினாள். மறுபடி நான் அவள் மனதை உறுதியாய் அறியவேண்டுமென்று, ஆம் அப்படிப்பட்ட அரசகுமாரன் ஒருவன் இங்கே ஒளித்துத் திரிந்துகொண்டிருக்கிறான். அவனொருகால், வசந்த உச்சவத்தில் தோழிகளோடுகூட நீ ரதிதேவிபோல விளையாடிக்கொண்டிருப்பதைத் தற்செயலாய்க் கண்ணுற்று உன்மேல் ஆசைகொண்டு அதற்காக என்னை வந்து வேண்டினான். நானும் உங்களிருவருடைய குணங்களைக் கண்டு அதிசயப்பட்டு அவ்வேண்டுகோளுக்கு உடன்பட்டு நெடுநாளாய் அவன் ஏற்படுத்திக்கொடுத்த புஷ்பமாலை சந்தனமுதலியவைகளால் உனக்குப் பிரீதி உண்டாக்கிக்கொண்டுவந்தேன். கடைசியில் உன் ஆழ்ந்தகருத்தை அறியவேண்டுமென்றே தன்னழகைத் தானே படத்தில் எழுதிக்கொடுத்து அனுப்பினான். ஒப்பற்ற ஞானசக்தியையுடைய அம்மஹாராஜனுக்கு அசாத்தியமென்பது ஒன்று உண்டோ? ஆதலின் இக்காரியம் இப்படியே கைகூடுமென்று நினைக்கிறேன். சங்கேதஸ்தானம் இன்னதென்று சொல்வாயானால் அந்தப் புருஷனை இப்போதே அழைத்துக்கொண்டுவந்து காட்டுவேனென்று சொன்னேன். அவள்சற்றுஆலோசித்து மறுபடியும்சொல்லுகிறாள். அம்மா! இச்செய்தி இப்போது ஒளிக்கத்தக்கதன்று; ஆதலால் சொல்லுகிறேன்கேள். என் தந்தையும் இத்தேசத்தரசனாயிருந்த பிரஹாரவர்மாவும் விட்டுப் பிரியாத நேசர்கள். மாளவதியென்கிற என் அன்னையும் பிரியம்வதையும் அப்படியே இருந்தார்கள். அப்போது இருவர்க்கும் பிள்ளையில்லாமல் இருந்ததனால் நம்மிருவருள் பெண்ணைப்பெற்றவன் தன் பெண்ணை பிள்ளையைப் பெற்றவனுடைய பிள்ளைக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று இருவரும் நிர்ப்பந்தம் செய்துகொண்டார்கள். பிரியம்வதைக்குப் பிள்ளைபிறந்தும் அவன் காணாமற் போய்விட்டானென்று விகடவர்மா தனக்குக் கொடுக்கும்படி கேட்டதனால் என் தகப்பனார் பிறந்தவுடனே என்னை அவனுக்குக் கொடுத்துவிட்டார். அவனோ கொடியன், தகப்பனுக்குத் துரோகம் நினைத்தவன், கெட்டநடையுடையவன், சாஸ்திரங்களிலும் காவ்யநாடகமுதலிய விஷயங்களிலும் பயிற்சி

அற்றவன், வீண்பெருமை பாராட்டுகிறவன், பொய்மொழியன், இவைகள்மாத்திரமேயல்ல, இன்னும் அநேகம் துர்க்குணங்கள் அவனிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. ஆதலால் எனக்கு அவன்மேல் ஆசைபிறக்கவில்லை. மேலும் இப்போது நமது உத்தியானவனத்திலே என் உயிர்த்தோழியான புஷ்கரிகை தன் பக்கலிலிருக்க அவளைக்கூடப் பாராமல், எனக்கு சக்களத்தியான ரமயந்திகையென்பவளுக்கு, நான் என் குழந்தைபோல் வளர்த்துவந்த சண்பகக்கொடியிலிருந்து பூக்களைக் கொய்து அழகுசெய்தான். நியாயமாய் அயோக்கியன், இப்போது உபேக்ஷைசெய்யவும் ஆரம்பித்தான். இனி அவனாலென்ன? பெண்களுக்குப் புருஷன் செம்மையாய் இராவிட்டால் அதைவிட துயரம் வேறென்ன? ஆதலின் அந்தப் புதிய மஹா புருஷனை நமது உத்தியான வனத்திலுள்ள கொடிமண்டபத்தில் எனக்குக் காட்டவேண்டுமென்றாள். அதுகேட்டு நான் மிக்க மனம்களித்து அப்படியே ஆகட்டுமென்று அவளைச் சமாதானப்படுத்திவந்தேன். இனி இஷ்டப்படி நடக்கலாம் என்றாள்.

## சமாசாரம்.

வைத்தியபாடசாலை.—சென்ற டிசம்பர்மீ இராணி குமாரனை உபசரிப்பதற்காகத் தஞ்சாவூரில் குடிகளெல்லாரும் கையொப்பம்செய்து திரண்ட பணம் சேர்த்து வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இளவரசருக்குத் தஞ்சாவூர் வழியாய்ப்போகச் சரிப்படவில்லை; ஆதலால் செலவுசெய்யாமல் மிகுந்த பணத்தை ஒரு பெரிய தர்மவிஷயத்தில் உபயோகப்படுத்தவேண்டுமென்று எண்ணித் திருவையாற்றில் ஒரு வைத்தியபாடசாலையை ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். லோகல்பண்டு சங்கத்தாரும் அவர்களால் கூடிய திரவியசகாயம் செய்வதாக ஒத்துக்கொண்டார்கள். ஆஸ்பத்திரியில்லாமல் வைத்தியசாஸ்திரம் படிப்பது பிரயாசையானதால் ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் ஒரு டாக்டரை அவ்விடம் அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஜனங்களெல்லாருக்கும் வைத்தியசாஸ்திரம் தெரிந்திருந்தால் பலவித நோய்களை வராமல் விலக்கிக்கொள்ளவும், வந்த நோய்களைப் பிரயாசையன்றி நீக்கிக்கொள்ளவும் கூடும்; தர்மங்களிலெல்லாம் சிறந்தது கல்விச்சாலை; அதிலும் சிறந்தது வைத்தியசாலை.

Printed at the C. K. S. Press.



ஸ்ரீரங்கம்.

ROYAL GATE OF THE TEMPLE OF SERINGAM.